Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.96 /2018 Date: 20.03.2024
Deposition of witness for prosecution: PW 6 (LW4 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சின்னமுருகேசன் | Caste | |
| Father Name | சந்திரன் | Calling | துப்புரவு பணியாளர் |
| Village | சின்னமனுார் | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.03.2024 TIME 3.59 **pm**

எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

கடந்த 28.09.2017ம் தேதி நானும், ரவியும் சின்னமனுார்– பாளையம் ரோட்டில் துர்க்கையம்மன்கோவில் அருகே மாலை 5.00 – 5.30 மணியளவில் வயலில் புல் அருத்து கொண்டிருந்த போது, டிராக்டர் வயலில் ஓட்டிக்கொண்டிருந்த நபர் வேகமாக ஓட்டிக்கொண்டிருந்தார். அதில் டிராக்டரில் இருந்த ஒரு நபர் உள்ளே விழுந்துவிட்டார். நாங்கள் சென்று பார்த்த போது, விஜயபாஸ்கர் என்பவர் இடுப்பிற்கு கீழ் டிராக்டர் கலப்பை வெட்டி சிதைக்கப்பட்டுவிட்டது. பின்னர் என்னுடன் இருந்த ரவி சின்னமனுாரில் உள்ள விஜயபாஸ்கர் பெற்றோருக்கு போன் செய்து அவர்களும் வந்துவிட்டார்கள். சம்பவ இடத்தில் இறந்துவிட்டார். சின்னமனுாரில் வைத்து போலிசார் விசாரித்தார்கள். டிராக்டர் எண் ஞாபகம் இல்லை. ஓட்டி வந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். **(எதிரியை அடையாளம் காண்பிக்க வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சி)**

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பாா்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.